கவனிக்க.- 2024.11.29 ஆந் திகதிய 2413 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ்மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2414 - 2024 දෙසැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2024.12.06

2414 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2312 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2309-B 82633-5,441 (2024/12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. *விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*
II. *விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;*
III. *இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;*
IV. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*
V. *இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;*
VI. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;*
VII. *பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;*
VIII. *பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.*

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. *சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.*
2. *பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.*
3. *பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*
4. *சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.*
5. *பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.*
6. *பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;*
7. *உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.*
8. *பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.*
9. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.*
10. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள்* (Electronic Communication Instruments/ Devices) *தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.*
11. *இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*
12. *பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.*
13. *எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.*
14. *பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*
15. *பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.*
16. *பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.*
17. *பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:*
    (i) *சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;*
    (ii) *பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;*
    (iii) *பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.*
        (a) *ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.*
        (b) *சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.*
    (iv) *பரீட்சார்த்தி புளூடூத்* (Bluetooth) *போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை* (Electronic Communication Devices) *உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;*
    (v) *பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;*
    (vi) *பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;*
    (vii) *நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;*
    (viii) *விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;*
    (ix) *கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;*
    (x) *கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;*
    (xi) *ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;*
    (xii) *உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;*
    (xiii) *ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்), தொழில்நுட்ப அலுவலர் (மின்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

1. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப அலுவலர் சேவை வகுதியில் 02 பதவிகளை நிரப்புவதற்காக தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 **ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள பதவிகள் மற்றும் பதவிகளின் கடமைகளின் இயல்பு**

| அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர் | பதவிக்கு அனுமதிக்கப் பட்ட தரம் | அனுமதிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|---|
| தொழில் நுட்ப அலுவலர் (சிவில்) | ( III,II,I ) | 01 | 1. திணைக்களத்திற்குரிய கட்டிடங்களின் பராமரிப்பு அலுவல்கள் மற்றும் குழாய்நீர் முறைமை மற்றும் பராமரிப்பு அலுவல்களை ஒழுங்கு முறையில் பேணிவருதல்.<br>2. வேலை மதிப்பீடுகளைத் தயாரித்தல், பரீட்சித்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தல்.<br>3. ஏற்புடைய சந்தர்ப்பங்களின்போது வேலைத் தளத்திற்குச் சென்று அவற்றின் பிழையற்ற தன்மை மற்றும் முன்னேற்ற பரிசீலனை, பின்னாய்வு மற்றும் அவை தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்<br>4. கட்டிட நிருமாணம் தொடர்பான விலைகளைப் பகுப்பாய்வு செய்தல், விலை மாற்றங்களுக்கமைய மதிப்பீடுகளின் வேறுபாடுகளைப் பரீட்சித்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தல்.<br>5. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுக்கமைய பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தை ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பாகவும் பரீட்சித்துப் பார்த்து அதில் பின்னடைவுகள் காணப்படின் அவற்றுக்கான காரணங்களைச் சமர்ப்பித்தல்.<br>6. நிறுவனத் தலைவரினால் பதவிக்குரியதாகக் கையளிக்கப்படுகின்ற ஏனைய கடமைகள். |
| தொழில்நுட்ப அலுவலர் (மின்) | ( III,II,I ) | 01 | 1. கட்டிடங்களை நிருமாணிக்கும்போது மற்றும் பராமரிக்கும்போது தேவைப்படுகின்ற மின் பொறியியல்சார் பணிகளுக்குரிய பூர்வாங்க விசாரணை, வடிவமைப்பு மற்றும் திட்டங்களைத் தயாரித்தல் மீது வேலை கண்காணிப்பு.<br>2. மின்பொறியியல்சார் பணிகளுக்குரிய மதிப்பீடு களைத் தயார் செய்தல், விலைகளைப் பகுப்பாய்வு செய்தல்.<br>3. பற்றுச் சீட்டுக்களைப் பரிசீலனை செய்தல், பரிந்துரை வழங்குதல்.<br>4. திணைக்களத்தின் கட்டிடங்களுக்காகவுள்ள மின் மற்றும் இயந்திரத் துறைகளுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளைப் பரீட்சித்துப் பார்த்தல், மேற் கொள்ளப்பட வேண்டிய பராமரிப்பு பணிகளைப் பேணி வருதல் மற்றும் அதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.<br>5. ஏற்றுக் கொள்ளப்பட்ட விபரக்குறிப்புக்கமைய பெறுகைக்கான எழுத்தாவணங்களைத் தயாரித்தல். |

| அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர் | பதவிக்கு அனுமதிக்கப் பட்ட தரம் | அனுமதிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|---|
| | | | 6. மின்பொறியியல்சார் பணிகளின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் அவற்றில் பின்னடைவுகள் காணப்படின் அதற்கான காரணங்கள், தேவையான மாற்று நடவடிக்கைகளைச் செய்தல்.<br>7. நிறுவனத் தலைவரினால் பதவிக்குரியதாகக் கையளிக்கப்படுகின்ற ஏனைய கடமைகள். |

1.2 நியமனம் செய்யப்படுகின்ற எண்ணிக்கை 02 ஆகும். நியமனம் நடைமுறைக்கு வருகின்ற தினம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்படும்.

2. **ஆட்சேர்ப்பு முறை**

2.1. **எழுத்துமூலப் பரீட்சை** : இப் பரீட்சை பின்வரும் இரு (02) வினாத்தாள்களைக் கொண்டதாகும்:

(i) நுண்ணறிவுப் பரீட்சை;

(ii) விடயசார் தொழில்நுட்ப பரீட்சை.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களினால் அனுமதிக்கப்படுகின்ற நிறுவனம் ஒன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சை ஆகும்.

2.2. **நேர்முகப் பரீட்சை** : புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. எழுத்துப் பரீட்சையில் சித்தியடைகின்ற விண்ணப்பதாரிகளுக்காக நடாத்தப்படும் இந்த ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதற்குரியதாக பிரசுரிக்கப்படும் விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா எனவும், தேகாரோக்கியம் குறித்தும் பரிசீலித்தல்.

3. **சம்பள அளவுத்திட்டம்** :- 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை அட்டவணை 1 இற்கமைய இப் பதவிக்குரிய மாதாந்த சம்பளத் திட்டம் ரூபா 31,040.00 -10 × 445 -11,660 – 10 × 730 – 10 × 750 - ரூபா 57,550.00 (MN- 03) ஆகும். தங்களுக்குரிய சம்பளமானது, அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்**:

4.1. அரசாங்க சேவை நியமனங்களைக் கட்டுப்படுத்துகின்ற பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1426/34 ஆம் இலக்க மற்றும் 2006.01.06 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அந்தச் சேவைப் பிரமாணக் குறிப்பில் மேற்கொண்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கும், 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் கீழ்ப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் சேவையின் III தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

4.2. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். 2016.01.01 ஆந் திகதி அல்லது அத் திகதியின் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள், தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

4.3. இப் பதவி மூன்றாண்டு தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப அலுவலர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.4. அரசாங்க நிர்வாக 18/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமையவும், அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு அமையவும் சேவையில் இணைந்து 05 ஆண்டுகளுக்குள் குறித்த அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்** :

5.1 **கல்வித் தகைமைகள்** .-

5.1.1 விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பவியல் விடயப் பரப்புக்குட்பட்ட மூன்று (03) பாடங்களில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.1.2 சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் பிறிதொரு பாடத்திற்கு திறமைச் சித்தி சகிதம் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 **தொழிற் தகைமைகள்** .-

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தேசிய தொழிற் திறன் (NVQ) 06 ஆம் மட்டத்தின் தகைமையொன்றினை கீழே காட்டப்படுள்ளவாறு பதவிக்குரியதாக பெற்றிருத்தல் வேண்டும்.

5.2.1 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

5.2.2 தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தேசிய பொறியியல் டிப்ளோமா,

அல்லது

5.2.3 உயர் கல்வி விடயப்பொறுப்பு அமைச்சுடன் இணைந்த இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா,

அல்லது

5.2.4 இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியைச் சிறப்பாகப் பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

5.2.5 உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கப்படும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்கள் உசாவி பெறப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமமான மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற தொழிற் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5.3. **உடற் தகைமைகள்** : இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உகந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

5.4. **ஏனைய தகைமைகள்** :

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பங்கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியில், பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. எந்தவொரு மதப்பிரிவைச் சேர்ந்த துறவி ஒருவரும் இப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகைமை பெறமாட்டார்.
5. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும், உரிய வயதெல்லையையும் விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரமே குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படும்.

6. **வயதெல்லை:**

| | |
|---|---|
| குறைந்த வயதெல்லை | : 18 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும். |
| உச்ச வயதெல்லை | : 30 வயதைவிட மேற்படாதிருத்தல் வேண்டும். |

(அதற்கமைய வயது தொடர்பான தகைமையாவது, விண்ணப்பதாரர்களின் பிறந்த திகதி 2006.12.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1994.12.06 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் காணப்படின் மாத்திரம் ஆகும்)

7. **பரீட்சைக் கட்டணம்:** பரீட்சைக் கட்டணம் ரூபா 1000.00 ஆகும். அத்தொகையை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு முன்னர் இலங்கையிலுள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரிலுள்ள தப்ரபேன் கிளையின் கணக்கு இலக்கமான 7041552 ஆம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு செலுத்துதல் வேண்டும். வங்கிக் கிளையினால் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். இக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை தன்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். அத்துடன் பரீட்சைக் கட்டணம் தொடர்பாக காசுக் கட்டளையோ அல்லது முத்திரையோ பொறுப்பேற்கப்படமாட்டாது.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்றவாறு இருத்தல் வேண்டும் என்பதோடு, அதனை கடதாசியின் இரு பக்கத்திலும் அமையும் வண்ணம் 8 ½" × 12" (ஏ4) அளவிலான தாளைப் பயன்படுத்தித் தயாரித்து பரீட்சார்த்தியினால் தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட மற்றும் தட்டச்சிடப்பட்ட விண்ணப்பங்களையும் பயன்படுத்த முடியும். 1.0 இலிருந்து 2.12 வரையான தலைப்புக்கள் விண்ணப்பப்படிவக் கடதாசியின் முதலாம் பக்கத்திலும், 3.0 இலிருந்து 5.0 வரை அதன் இரண்டாம் பக்கத்திலும் மீதி மூன்றாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தத்தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதை விசேடமாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும் தகைமைகளுக்கு உரியதான சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் சரியான முறையில் நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எந்தவோர் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை ஒத்ததாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

8.2 விண்ணப்பப்படிவம் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கருதுகின்ற மொழியிலேயே அமைதல் வேண்டும்.

8.3 பரீட்சைக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2025.01.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 02" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப அலுவலர் சேவை வகுதி தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2024" எனப் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். 2025.01.06 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

8.4 விண்ணப்பப்பத்திரத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்தம் ரூபா 240,360 (06/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 1 ஆம் அட்டவணைக்கு அமைய மாதாந்தம் ரூபா 41,580 இற்கு மேற்பட்ட) அடிப்படை வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள பரீட்சார்த்திகளின் கையொப்பம் தத்தமது திணைக்களத் தலைவர்களினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

8.5 எல்லா வகைகளிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அஞ்சலில் அனுப்பப்படும்போது விண்ணப்பப்படிவமொன்று காணாமற்போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் செய்யப்படுகின்ற எவ்விதமாக முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8.6 விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

9. **பரீட்சைக்கான பிரவேசம் :**

9.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித் துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையின் மீது அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் திகதியில் அல்லது அத் திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் (ஏற்புடையதாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் சான்று) சகிதம் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் பரீட்சை நடாத்துகின்ற நிறுவனத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

9.2 பரீட்சார்த்தியொருவர் தனக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்துப் பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சை மண்டபத்திற்கான அனுமதி அட்டையில் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டு முதலாவதாக அம் மண்டபத்தில் தோற்றுகின்ற தினத்தில் அந்தப் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்திகளும் பின்பற்றியொழுகவேண்டிய சட்டதிட்டங்கள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படுகின்ற சட்டஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த சட்டதிட்டங்கள் மீறப்படுமாயின் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்படுவதற்கு நேரிடும்.

***குறிப்பு*** : விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படுவதற்குக் காரணமாக அமையமாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**: தாம் தோற்றுகின்ற எல்லாப் பாடங்கள் சம்பந்தமாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தியொருவர், பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:

அ. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
ஆ. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

11. **பொய்யான தகவல்களை வழங்குதல்:** பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனத் தெரிய வருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். ஒரு விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் பொய்யானவை என தெரிந்து கொண்டே சமர்ப்பித்துள்ளார் எனத் தெரிய வருமிடத்து, அல்லது ஏதேனும் ஒரு முக்கியமான விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

12. இந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைவாக உள்நாட்டு இறை வரி ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்படுகின்ற விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை நடைமுறைகள் மற்றும் பரீட்சை மொழிமூலம்** :

(அ) இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும்.

குறிப்பு :

I. பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றும் போது அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளித்தல் வேண்டும்.

II. தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஊடக மொழியைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

14. **ஆட்சேர்ப்பு முறை** : எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் மொத்த புள்ளிகளின் தேர்ச்சி பெற்ற ஒழுங்கு முறை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கைக்கு அமைய சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

14.1 **எழுத்துப் பரீட்சை**:

| பாடங்கள் | அதிகபட்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| I. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% |
| II. விடயம்சார் தொழில்நுட்பப் பரீட்சை | 100 | 40% |

பரீட்சார்த்திகள் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

14.2 **நேர்முகப் பரீட்சை**:

(i) மேலே இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தொடர்பான வரையறைகளுக்கு உட்பட்டனவா என்பது பற்றியும் பரிசீலித்தல் மற்றும் உடற்தகைமையைப் பரிசீலிப்பது தொடர்பாகவும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) நேர்முகப் பரீட்சைக் குழு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களால் நியமிக்கப்படும்.

(iii) ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது நாற்பது (40) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளிலிருந்து அனைத்துப் பாடங்களுக்கும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கமைய ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்கின்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவதற்குத் தகைமை பெறுவர். தகைமைபெற்ற பரீட்சார்த்திகளிலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு எழுத்துப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொண்ட தேர்ச்சிக்கமைய தொடர் ஒழுங்கு மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கைக்கமைய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களினால் தீர்மானிக்கப்படும். தகைமை பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேற்குறித்த தீர்மானிக்கப்படுகின்ற எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கை ஒன்றாக இல்லாவிடின் அவ்வாறான சந்தர்ப்பமொன்றின் போது நேர்முகப் பரீட்சைக்கு அவ்வாறு தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் எண்ணிக்கை மாத்திரம் அழைக்கப்படும்.

***கவனத்திற்கொள்க*** - நேர்முகப் பரீட்சைக்குத்தோற்றுவதானது பதவி வழங்குவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படமாட்டாது.

14.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கையானது, ஆட்சேர்ப்பின் போது தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளுக்கு அமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரியில் இருந்து தேர்ச்சி ஒழுங்கு முறைக்கமைய இச் சேவையின் மூன்றாம் (III) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

14.4 **பெறுபேறுகள்**:

வர்த்தமானி அறிவித்தலின் 14.1 பந்திக்கமைய தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் பரீட்சையில் பெற்றுக் கொள்கின்ற மொத்தப் புள்ளிகளின் தேர்ச்சிக்கமையத் தயாரிக்கப்பட்ட பெறுபேறு அட்டவணை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்பி வைக்கப்படும்.

15. **எழுத்துமூலப் பரீட்சையின் பாடத்திட்டம்**:

| பதவி | வினாப்பத்திரம் / பாடத்துறை | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடைவதற்கு பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|---|
| தொழில் நுட்ப அலுவலர் (சிவில்/ மின்) | 1. நுண்ணறிவுப் பரீட்சை | படைப்பாற்றல் மிக்க சிந்தனைத் திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், கால முகாமைத்துவம் ஆகியவற்றை அளவிடுவதற்கான சுருக்க வினாப்பத்திரம் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

| பதவி | வினாப்பத்திரம் / பாடத்துறை | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடைவதற்கு பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|---|
| | 2. விடயம்சார் தொழில் நுட்ப பரிசீலனை | பதவிக்குரிய தொழில்நுட்ப அறிவு மற்றும் விடய அறிவு ஆகியவற்றை அளவிடுவதற்கான எட்டு (08) வினாக்களிலிருந்து ஐந்து (05) வினாக்களுக்கு சமமான புள்ளிகள் வழங்கப்படும். | 2 மணித்தியாலங்கள் | 100 | 40% |

16. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்ள அறிவித்தல்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின், அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில் சிங்கள மொழியிலான அறிவித்தல் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

டப்ளியூ. ஏ. சேபாலிக்கா சந்திரசேக்கர,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02.
2024.11.13.

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்/மின்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2024**

1. தனிப்பட்ட தகவல்கள் :

1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :.......................................................................................................

.......................................................................................................................................................

(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA.)

1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னர் வருமாறு பெயர் : (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்): .......................................................................................................

.......................................................................................................................................................

(உதாரணம்: GUNAWARDHANA,H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (தமிழில் /சிங்களத்தில்):.......................................................................................................

.......................................................................................................................................................

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்): .......................................................................................................

.......................................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (தமிழில் /சிங்களத்தில்):.......................................................................................................

.......................................................................................................................................................

2.3 நிரந்தர வதிவிடத்திற்குரிய பொலிஸ் நிலையம் :.......................................................................................................

3. பால் நிலை (குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

ஆண் - 0
பெண் - 1

4. திருமணமானவரா /திருமணமாகாதவரா (குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2

5. இனம் (குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

(சிங்களம் - 1, தமிழ் -2, முஸ்லிம் - 3, வேறு இனம் - 4)

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

7. பிறந்த திகதி :

வருடம் மாதம் திகதி

8. தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கவேண்டிய இறுதித் தினத்தில் வயது:

(2024.12.06 ஆந் திகதியில்)

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

9. தொலைபேசி இலக்கம் :

10. கல்வித் தகைமைகள் :

க.பொ.த.(சா./த.) பரீட்சை -

(I) பரீட்சை வருடம் -
(II) பரீட்சை சுட்டெண் -
(III) பரீட்சைப் பெறுபேறு -

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க.பொ.த.(உ./த.) பரீட்சை -

(I) பரீட்சை ஆண்டு -
(II) பரீட்சைச் சுட்டிலக்கம் -
(III) பரீட்சைப் பெறுபேறுகள் -

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. தொழிற் தகைமைகள் : ..................................................................................................................................................................
.........................................................................................................................................................................................
.........................................................................................................................................................................................
.........................................................................................................................................................................................
.........................................................................................................................................................................................

12. நீங்கள் அரசாங்க சேவையில் ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக அல்லது ஏதேனும் தவறு தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் அது பற்றிய சகல விபரங்களையும் தரவும்:
.........................................................................................................................................................................................
.........................................................................................................................................................................................

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**:

(I) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென மரியாதையுடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்படாமையினாலும் மற்றும் /அல்லது சரியாகப் பூர்த்தி செய்யாமையினாலும் மற்றும் /அல்லது பிழையாகப் பூர்த்தி செய்திருப்பதனாலும் ஏற்படக்கூடிய நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(II) என்னால் இங்கு செய்யப்பட்டுள்ள இந்த வெளிப்படுத்துகை பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

(III) விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் விண்ணப்பம் கோரும் அறிவித்தலிலுள்ள அனைத்து விடயங்களையும் நன்கு வாசித்து விளங்கிக் கொண்டேன் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்படுவேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

.......................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :..................................

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்** :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு. / திருமதி / செல்வி.............................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ............................................. ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................................................
(கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்)

திகதி :.................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர்:........................................................................................................

பதவி :...........................................................................................................

முகவரி :...........................................................................................................

(பதவி இலச்சினையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்)

15. திணைக்களத் தலைவரின் உறுதியுரை: (அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மாத்திரம்)

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற (முழுப் பெயர்).........................................................................................................

என்பவர் இந்த அமைச்சில் / திணைக்களத்தில் ................................ சேவையின் ........................... வகுப்பில் நிரந்தரப் பதவியொன்றில் பணியாற்றுகின்றார் எனவும், அவர் எந்தவொரு விதத்திலுமான ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படவில்லை எனவும், அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் உறுதிப்படுத்துவதோடு அவரின் விண்ணப்ப படிவத்தைப் பரிந்துரைத்து சமர்ப்பிக்கின்றேன்.

................................................................
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்)

திகதி : ..................................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர்:...................................................................................................

பதவி :.......................................................................................................................

முகவரி :....................................................................................................................

(பதவி இலச்சினையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்)

12-08

---

**திருத்தம்**

**தொழில்நுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**

தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி – 2024/ 2025

2024.11.01 ஆந் திகதியிடப்பட்ட 2409 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறி 2024/ 2025 கல்வியாண்டுக்கான விண்ணப்பங்களுக்கான விண்ணப்ப முடிவு திகதி 2024.12.16 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இதுவரை இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்காத விண்ணப்பதாரர்கள் 2024.12.16 ஆந் திகதி வரை தமது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க மடியும்.

2024.11.01 ஆந் திகதியிடப்பட்ட 2409 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற அனைத்த நிபந்தனைகளும் மாறாது.

மேலதிக விவரங்களுக்கு தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தை பார்வையிடவும் (http://www.itum.mrt.ac.lk).

பணிப்பாளர்,
தொழில்நுட்பவியல் நிறுவகம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

12-81

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

*அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை– 2024*
*அமைப்பு விதியும் விதப்புரைகளும்*

*1.* ***பரீட்சை நிபந்தனைகளும் பாடத்திட்டமும்.***– *2023, 2024* ஆம் ஆண்டுகளுக்குரிய அறநெறிப் பாடசாலை இறுதிச்சான்றிதழ்ப் பரீட்சைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* ***பரீட்சை நிலையங்கள்***: இணைப்பு I இல் காட்டப் பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும், ஏதேனும் ஒரு நகரத்தில் போதியளவு விண்ணப்பதாரிகள் எண்ணிக்கையளவில் விண்ணப்பிக்காத சந்தர்ப்பங்களில் அந்த நகரத்தின் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, குறித்த விண்ணப்பதாரிகள் அதற்கு அருகாமையில் அமைந்துள்ள வேறொரு பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர்.

*3.* **மொழிமூலம்**:

*3.1* இப்பரீட்சை தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப் படும்.

*3.2* இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் இணைப்பு *02* இல் காட்டப்பட்டுள்ளது.

*4.* **தகைமை**: இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப் பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளுள் ஏதேனும் ஒன்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

*4.1* இப்பரீட்சை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கானது. மேற்பிரிவில் பத்தாம் ஆண்டில் சித்திபெற்று, அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பத்திர வகுப்பில் முழுமையான வருடமோ அல்லது கற்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்.

*4.2* கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா./ தர) ப் பரீட்சையில் இந்துசமயம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் அல்லது சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பத்திரப் பரீட்சையில் இந்துசமய பாடம் உட்பட சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு**.–

(அ) இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து விண்ணப்பதாரி மேற்குறித்த தகைமையைப் பெற்றுள்ளனர் என்பதனை அறநெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப் பாசிரியர் மூலம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தில் பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலை யொன்றின் ஊடாக மட்டுமே இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

*5.* கடந்த ஆண்டு மாணவர்களைப் பரீட்சைக்கு அனுப்பி வைத்த எல்லா இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் பொதுமான விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

*5.1* விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி *2025.01.06* ஆந் திகதி ஆகும்.

*5.2* விண்ணப்பப்படிவங்கள், தெளிவாகவும் பிழையின்றி யும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு அமையாத விண்ணப்பப் படிவங்களும், இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

*5.3* பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப் படல் வேண்டும் :-

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை தொடர்பாக எந்தவொரு அறநெறிப் பாடசாலைக்கும் அறியத்தர மாட்டாது.

*5.4* விண்ணப்பப்படிவங்கள் இணைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2024" எனவும், பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகர இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்.

*5.5* விண்ணப்பப்படிவங்களோடு எவ்வித சான்றிதழ் களையும் இணைத்து அனுப்பக்கூடாது. விண்ணப்ப தாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதனை அறநெறிப் பாடசாலை அதிபர் அல்லது பொறுப் பாசிரியர், உறுதிப்படுத்தல் வேண்டும்.

*6.* ***பரீட்சைக் கட்டணம்.***– இப்பரீட்சைக்குரிய கட்டணம் ரூபா *200* ஆகும். ஆயினும், முதற்தடவையாக இப்பரீட்சையிற் தோற்றுபவர்களுக்கு இக்கட்டணத்திலிருந்து விலக்களிக்கப் படும். நூன சித்தி பாடத்தைப் பூரணப்படுத்திக் கொள்வதற்கான கட்டணம் ரூபா *50.00* ஆகும்.

*6.1* பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய விண்ணப்ப தாரிகள் (தமது அறநெறிப் பாடசாலை அதிபரூடாக) நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் உரிய பணத்தைச் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்

சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்பவேண்டும். (முத்திரை/ காசுக் கட்டளை மூலமாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த முடியாது.) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன்கீழ் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

6.2 அறநெறிப் பாடசாலை அதிபர்கள் உரிய பரீட் சார்த்திகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பரீட்சைக் கட்டணத்தை மொத்தமாக சேகரித்து அருகாமை யிலுள்ள தபால் நிலையத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

6.3 எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்குச் செலுத்தப் பட்ட கட்டணம், வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ அல்லது மீளப்பெறவோ முடியாது.

7. **பரீட்சை அனுமதி அட்டை**: பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உரிய அறநெறிப் பாடசாலை அதிபர்கள்/பொறுப்பாசிரியர்கள் மூலமாக விநியோகிக்கப் படும்.

7.1 சகல விண்ணப்பதாரிகளும் தாம் முதலாவதாகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பத்தினை சான்றுறுதி செய்யப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத போது அல்லது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு நிலையத்தில் தோற்றும் போது அவரது பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப் பம், அறநெறிப் பாடசாலை அதிபர் அல்லது கிராம அலுவலர் மூலம் குறித்த விண்ணப்பதாரிகளுடையது என உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த அறநெறிப் பாடசாலையின் அதிபர், இவ்விடயத்தைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் :

1. பரீட்சையின் பெயர் ;
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் மற்றும் கணினி இலக்கம்;
3. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் மற்றும் முகவரி;
4. பரீட்சைக்காக விண்ணப்பித்த நகரம் ;
5. விண்ணப்பப்படிவங்களைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்த தபால் நிலையம் ;
6. பதிவுத்தபால் பதிவு இலக்கமும் திகதியும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- அறநெறிப் பாடசாலை ஒன்றின் மூலம் தோற்றும் மாணவர்கள், பரீட்சை நிலையத்தில் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துக்கொள்ளும் வகையில் பரீட்சை மண்டபத்திற்குள் அமர்ந்திருத்தல் வேண்டும். அதற்கென கீழ்க்குறித்த ஏதேனும் ஒரு ஆவணத்தினை சமர்ப்பிக்க முடியும்.

8.1 தேசிய ஆளடையாள அட்டை (National Identy Card);
8.2 செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு (Valid Passport) ;
8.3 செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் (Valid Driving Licence).

9. **சித்திபெற்றமையை தீர்மானித்தலும், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடலும்**.- இப்பரீட்சை நான்கு பாடங்களை உள்ளடக்கியதாகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்திபெறும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தி பெற்றோராகக் கருதப்படுவர். ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்திபெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்திபெறத் தவறுவோர் நூனசித்தி பெற்றோராகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்து வரும் இரண்டு பரீட்சை வருடங்களுக்குள் நூன சித்திப் பாடத்திற்குத் தோற்றி சித்திபெற்றால் மட்டுமே பரீட்சையில் சித்தி பெற்றவர்களாகக் கணிக்கப்படுவர்.

9.1 பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டு, மீள்பரிசீலனை முடிவுகள் வெளியானதன் பின்னரே விண்ணப்ப தாரிகளின் பரீட்சை முடிவுகள் அறநெறிப் பாடசாலை அதிபர்/ பொறுப்பாசிரியருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- இப்பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுகின்ற ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உரிய சான்றிதழ்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் அறநெறிப் பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்ற போதும் சான்றிதழ் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின் உரிய அறநெறிப் பாடசாலை அதிபர் மூலமாக,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனம்சார் பரீட்சைகள் பெறுபேற்றுக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

எனும் முகவரிக்கு அறிவித்து விபரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல்**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 14 தினங்களுக்குள், இலங்கைப் பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் பரீட்சைத்

திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்படும் மாதிரிப் படிவம் மூலம் அறநெறிப் பாடசாலை அதிபர்/ பொறுப்பாசிரியர் வேண்டுகோளிற்கிணங்க மாத்திரமே விடைத்தாள் மீள் பரிசீலனைக்காக இடமளிக்கப்படும். இதற்கான கட்டணத்தொகை காலத்திற்கு காலம் மாறுபடுவதனால் அது பற்றி உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும். எக்காரணத்தைக் கொண்டும் பரீட்சார்த்திகளுக்கோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கோ விடைத்தாள்களை பரீட்சிக்க இடமளிக்கப்படமாட்டாது.

12. இந்த ஒழுங்குகள் மற்றும் நிபந்தனைகளின்படி செயற்படுவதற்கு அனைத்துப் பரீட்சை விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டிருக்க வேண்டிய அதேவேளை, இந்நிபந்தனைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

13. தமிழ் மொழி மூலம் மாத்திரமே அறிவித்தல்கள் வெளியிடப்படும் என்பதனால் அறிவித்தல்களை நன்கு வாசித்து அதன்படி செயற்படவும்.

எச். ஜே. எம். சீ. அமித் ஜயசுந்தர,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை,
2024, திசெம்பர் 06.

### *இணைப்பு 01*

பரீட்சை நகரங்களும் நகர இலக்கங்களும் :

| **கொழும்பு மாவட்டம் - 01** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மருதானை | 0101 |
| பம்பலப்பிட்டி | 0102 |
| நுகேகொடை | 0103 |
| அவிசாவளை | 0104 |

| **கம்பஹா மாவட்டம் - 02** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| கம்பஹா | 0201 |
| நீர்கொழும்பு | 0202 |
| வத்தளை | 0203 |

| **களுத்துறை மாவட்டம் - 03** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| களுத்துறை | 0301 |
| பாணந்துறை | 0302 |

| **கண்டி மாவட்டம் - 04** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| கண்டி | 0401 |
| புஸ்ஸல்லாவ | 0402 |
| கலஹா | 0403 |
| கம்பளை | 0404 |
| நாவலப்பிட்டி | 0405 |

| **மாத்தளை மாவட்டம் - 05** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மாத்தளை | 0501 |
| இரத்தோட்டை | 0502 |

| **நுவரெலியா மாவட்டம் - 06** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| நுவரெலியா | 0601 |
| ஹற்றன் | 0602 |
| தலவாக்கலை | 0603 |
| மஸ்கெலியா | 0604 |

| **காலி மாவட்டம் - 07** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| காலி | 0701 |

| **மாத்தறை மாவட்டம் - 08** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மாத்தறை | 0801 |
| தெனியாய | 0802 |

| **அம்பாந்தோட்டை மாவட்டம் - 09** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| அம்பாந்தோட்டை | 0901 |

| **யாழ்ப்பாணம் மாவட்டம் - 10** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| யாழ்ப்பாணம் | 1001 |
| சாவகச்சேரி | 1002 |
| பருத்தித்துறை | 1003 |
| வேலணை | 1004 |
| நெடுந்தீவு | 1005 |

| **மன்னார் மாவட்டம் - 11** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மன்னார் | 1101 |

| வவுனியா மாவட்டம் - 12 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| வவுனியா | 1201 |
| செட்டிக்குளம் | 1202 |

| முல்லைத்தீவு மாவட்டம் - 13 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| முல்லைத்தீவு | 1301 |
| புதுக்குடியிருப்பு | 1302 |
| ஒட்டுசுட்டான் | 1303 |

| கிளிநொச்சி மாவட்டம் - 14 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| கிளிநொச்சி | 1401 |
| பூநகரி | 1402 |
| முழங்காவில் | 1403 |
| பளை | 1404 |

| மட்டக்களப்பு மாவட்டம் - 15 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மட்டக்களப்பு | 1501 |
| களுவாஞ்சிக்குடி | 1502 |
| வாழைச்சேனை | 1503 |
| செங்கலடி | 1504 |

| அம்பாறை மாவட்டம் - 16 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| அம்பாறை | 1601 |
| அக்கரைப்பற்று | 1602 |
| கல்முனை | 1603 |
| திருக்கோவில் | 1604 |
| பொத்துவில் | 1605 |
| சம்மாந்துறை | 1606 |

| திருகோணமலை மாவட்டம் - 17 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| திருகோணமலை | 1701 |
| மூதூர் | 1702 |

| குருநாகல் மாவட்டம் - 18 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| குருநாகல் | 1801 |

| புத்தளம் மாவட்டம் - 19 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| புத்தளம் | 1901 |
| சிலாபம் | 1902 |

| அநுராதபுரம் மாவட்டம் - 20 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| அநுராதபுரம் | 2001 |

| பொலன்நறுவை மாவட்டம் - 21 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| பொலநறுவை | 2101 |

| பதுளை மாவட்டம் - 22 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| பதுளை | 2201 |
| வெலிமடை | 2202 |
| பண்டாரவளை | 2203 |
| அப்புத்தளை | 2204 |
| பசறை | 2205 |

| மொணராகலை மாவட்டம் - 23 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மொணராகலை | 2301 |
| பிபிலை | 2302 |

| இரத்தினபுரி மாவட்டம் - 24 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| இரத்தினபுரி | 2401 |
| கஹவத்தை | 2402 |
| பலாங்கொடை | 2403 |
| இறக்குவானை | 2404 |

| கேகாலை மாவட்டம் - 25 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| கேகாலை | 2501 |
| யட்டியந்தோட்டை | 2502 |
| வரக்காப்பொல | 2503 |

## இணைப்பு 2

### அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - இந்து சமய பாடத்திட்டம்

01. சமய வரலாறு
02. சமய மெய்யியல்
03. சமய இலக்கியம்
04. சமய வாழ்வியல்

**01. சமய வரலாறு**

1.0 இந்து சமயத்தின் பொதுவான வரலாற்று நோக்கு

- 1.1 சிந்துவெளி நாகரீகம்
- 1.2 சனாதன தர்மம்
- 1.3 வேதகாலம்
  - 1.3.1 வேதகால தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும்
- 1.4 இதிகாசங்கள்
  - 1.4.1 வகை
  - 1.4.2 தோன்றக் காரணம்
  - 1.4.3 பகவத் கீதை
- 1.5 புராணங்கள்
  - 1.5.1 பதினென் புராணவகை – தோன்றக் காரணம்
- 1.6 தருமசாத்திரங்கள்

2.0 சைவசமய வரலாறு

- 2.1 சைவ சமயத்தின் தொன்மை
- 2.2 சிந்துவெளி நாகரிக காலச் சிவவழிபாடு
- 2.3 சிவாகமங்களின் தோற்றமும் வழிபாடும்

3.0 தமிழகத்துச் சைவசமய வரலாறு

- 3.1 சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்
- 3.2 பக்திநெறி
  - 3.2.1 காரைக்காலம்மையார்
  - 3.2.2 சமயகுரவர் நால்வர்
  - 3.2.3 ஆலயங்களும், வழிபாடும்
- 3.3 சாத்திரங்களும் கோத்திரங்களும்
  - 3.3.1 கோயில் கட்டிடங்களின் வளர்ச்சி
  - 3.3.2 திருமுறை, திவ்வியபிரபந்தம் தொகுப்பு
  - 3.3.3 சந்தான குரவர் நால்வர்
  - 3.3.4 மெய்கண்ட சாத்திரங்கள்
  - 3.3.5 பிற்காலத்து தோத்திரப் பாடல்கள்
- 3.4 சைவ நிறுவனங்கள் : மடங்களும், ஆதீனங்களும்
- 3.5 ஞானியர் வரலாறு : திருமூலர்

4.0 இலங்கையில் சைவம்

- 4.1 தொன்மை
- 4.2 புராதன ஆலயங்கள் (சிறப்பாக)
  திருக்கேதீச்சரம்
  திருக்கோணேஸ்வரம்
  முன்னேச்சரம்
  நகுலேஸ்வரம்
  கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
- 4.3 பிரதேச ஆலய வரலாறு
  (மாணவர் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள ஆலயம் பற்றி அறிதல்)

5.0 இலங்கையில் சைவ மறுமலர்ச்சி

- 5.1 பெரியார்கள்
  - 5.1.1 ஆறுமுகநாவலர்
  - 5.1.2 விபுலானந்தர்
- 5.2 சைவம் வளர்த்த நிறுவனங்கள்
- 5.3 ஞானியர்

**02. சமய மெய்யியல்**

1.0 வேதங்கள்

- 1.1 பல தெய்வக் கோட்பாடு
- 1.2 ஒரு தெய்வக் கோட்பாடு
- 1.3 வேதப் பிரிவுகள்

2.0 உபநிடத்தங்கள்

- 2.1 மகாவாக்கியங்கள்
- 2.2 அறக்கோட்பாடு

3.0 பகவத்கீதை

- 3.1 நால்வகை யோகம்

4.0 மூவகை வேதாந்தங்கள்

- 4.1 அத்துவைதம்
- 4.2 விசிட்டாத்வைதம்
- 4.3 துவைதம்
  (இவற்றை அறிமுகப்படுத்தினால் போதும்)

5.0 சைவ சித்தாந்தம்

- 5.1 மெய்கண்ட சாத்திரங்கள் (14) அறிமுகம்
- 5.2 சற்கரிய வாதம்
- 5.3 முப்பொருள் (பதி, பசு, பாசம்)
- 5.4 சைவநாற்பாதங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)
- 5.5 குரு, லிங்க, சங்கம வழிபாடு
- 5.6 சிவசின்னங்கள்
- 5.7 தீட்சை

6.0 திருவருட்பயன் - 10 அதிகாரம்

03. **சமய இலக்கியம்**

1.0 திருமுறைப் பாடல்கள்
(மனனம், பொழிப்பு, சந்தர்ப்பம்)

1.1 திருஞானசமபந்தர் தேவாரம்
(அ) "வேயுறு தோளி பங்கன்................"
(பதிகம் முழுவதும்)

1.2 அப்பர் தேவாரம்
(அ) "மாதர் பிறை கண்ணியானை ......."
(பதிகம் முழுவதும்)

1.3 சுந்தரர் தேவாரம்
(அ) திருக்கேதீச்சரத் திருப்பதிகம்
"நத்தார் படை ............................"
(பதிகம் முழுவதும்)

1.4 மாணிக்கவாசகர் - திருவாசகம்
(அ) திருவெம்பாவை (முழுவதும்)
(ஆ) சிவபுராணம்

1.5 திருவிசைப்பா
(அ) "அற்புதத் தெய்வம் ....................."
(ஆ) "கற்றவர் விழுங்கும் ....................."

1.6 திருப்பல்லாண்டு
(அ) "சீரும் திருவம் பொலிய ................."
(ஆ) "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் .........................................................."
(இ) "மிண்டு மனத்தவர் ................."

1.7 திருப்புராணம்
(அ) "ஐந்து பேரறிவும் ..........................."
(ஆ) "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன் ..........................................."
(இ) "அண்ணலார் தமக்கீடு ................."

1.8 திருமந்திரம்
(அ) "அன்பும் சிவமும் ......................"
(ஆ) "உள்ளம் பெருங்கோயில் ................"
(இ) "யாவர்க்குமாம் ..............."

1.9 இரண்டாம் திருமுறை
முத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை
– கபிலதேவ நாயனார்
"திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும்
செங்சொற் ........." காரைக்காலம்மையார்
அருளச் செய்த அற்புதத் திருவந்தாதி
"கண்ணாரைக் கண்டும் என் கையாரக்
கூப்பியும் ............"

2.0 ஏனைய தோத்திரப் பாடல்கள்

2.1 திருப்புகழ் - அருணகிரிநாதர்
(அ) "எதிரிலாத பக்தி ............"
(ஆ) "பக்தியால் யானுனை ..........."

2.2 அபிராமி அந்தாதி – அபிராமிப்பட்டர்
(அ) "நின்றும் இருந்தும் கிடந்தும் ..................."
(ஆ) "சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகி ....................."
(இ) "கண் களிக்கும்படி கண்டு கொண்டேன் ........................"

2.3 பராபரக்கண்ணி – தாயுமானவர்
(அ) "கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க ...................."
(ஆ) "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு"
(இ) "விரும்பு சரியை முதல் மெய்ஞானம் நான்கும் ........."
(ஈ) "சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் .........................................."
(உ) "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே ....................."

3.0 திவ்விய பிரபந்தங்கள்
திருப்பாவை :- ஆண்டாள்
(அ) "மாரிமழை முழைஞ்சல் முன்னிக் கிடத்துறங்கும்............"
(ஆ) அன்றிவ்வுலக மறந்தாயடி போற்றி ..............................."
(இ) "மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் ......................."

4.0 கந்தபுராணம்
கந்தவிரதப் பாடல்கள் - 20
(தெரிவுசெய்யப்பட்டவை) – பாடல் ஒன்று முதல் இருபது வரை

5.0 பெரிய புராணம்
கண்ணப்பநாயனார் புராணம் - பாடல் 815 முதல் 835 வரை

6.0 திருவிளையாடற் புராணம் -
பரம்சோதி முனிவர்

(அ) கால்மாறியாடின படலம் - 1475 பாடல் முதல் 1489 பாடல் வரை

7.0 நீதிப்பாடல்கள்
திருக்குறள் - திருவள்ளுவர்

(அ) அறன்வலியுறுத்தல் - 4 ஆம் அதிகாரம்
(ஆ) இல்வாழ்க்கை – 5 ஆம் அதிகாரம்
(இ) அடக்கமுடைமை – 13 ஆம் அதிகாரம்
(ஈ) ஒழுக்கமுடைமை – 14 ஆம் அதிகாரம்
(உ) நட்பு - 79 ஆம் அதிகாரம்

04. **சமய வாழ்வியல்**

1.0 ஆலய வழிபாடும் இறை நம்பிக்கையும்

1.1 திருக்கோயில் அமைப்பு
1.2 திருக்கோயில் வழிபாடு
1.3 நித்திய, நைமித்திய கிரியைகள்
1.4 இறை நம்பிக்கை
(பக்தி அனுபவங்கள்)

2.0 வீட்டில் வழிபாடு
- 2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை வழிபாடு)
- 2.2 விசேட வழிபாடு
  - (அ) கூட்டு வழிபாடு
  - (ஆ) தியானம்
  - (இ) செபம்
- 2.3 அகப்புறத் தூய்மை

3.0 விரதங்களும் பண்டிகைகளும்
- 3.1 விரதங்கள்
  - (அ) சிவராத்திரி
    நவராத்திரி
    விநாயகர் சதுர்த்தி
    கந்தசஷ்டி
    விநாயகர் சஷ்டி
    திருவாதிரை
    பிரதோஷம்
    வைகுண்ட ஏகாதசி
  - (ஆ) அமாவாசை,
    புரணை விரதங்கள்
- 3.2 பண்டிகைகள்
  - 3.2.1 தைப்பொங்கல்
  - 3.2.2 சித்திரை வருடப் பிறப்பு
  - 3.2.3 ஆடிப்பிறப்பு
  - 3.2.4 தீபாவளி
  - 3.2.5 கார்த்திகை விளக்கு

4.0 அபரக் கிரியைகள்
- 4.1 பொது விளக்கீடு
- 4.2 மரணக் கிரியைகள்
- 4.3 சபிண்டீகரணம்
- 4.4 சிரார்த்தம்

5.0 சமய, ஆன்மீக விழுமியங்கள்
- 5.1 பெற்றோர், மூத்தோர், பெரியோர், குரு ஆகியோரைக் கனம் பண்ணல்
- 5.2 நற்குடி மக்களாக வாழ்வதற்கு உதவும் நெறிமுறைப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்
- 5.3 அன்பு, உண்மை, கருணை, இன்னா செய்யாமை, பிறர் நலம் பேணல், கூடிவாழும் பண்பு, நீதி, கடமையுணர்வு முதலிய மனித விழுமியங்களைப் பேணல், இவற்றை அறிந்துக் கொள்ளல்.

6.0 சமய வாழ்வுடன் கலைகள்-
இசை
நடனம்
கட்டடம்
சாத்துப்படி
மாலை கட்டுதல்
பண்ணிசை
சிற்பம்
ஓவியம்
சுவாமிக்கு அலங்காரம் செய்தல்
கோலம் போடுதல்

12-129

---

**திருத்தம்**

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

2024.11.22 ஆந் திகதிய வர்த்தமான அறிவித்தலை திருத்தஞ் செய்தல்

2024.11.22 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி இலக்கம் 2412 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் வருகின்ற தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2025 ஆம் ஆண்டில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எஸ்.சி. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்.

| *தொடர் இல.* | *பாடநெறிக் குறியீட்டு எண்* | *பாடநெறியின் பெயர்* | *திருத்தஞ் செய்யப்பட வேண்டிய முறை* |
|---|---|---|---|
| 20. | G50S002F4.3 | மோட்டார் வாகன மின்னியலாளர்<br>AUTOMOBILE ELECTRICIAN<br>முழு நேரம் -<br><br>1 ½ வருடங்கள் | களுத்துறை தொழில்நுட்ப கல்லூரி தற்போது நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது |
| 22. | G50S001F4.2 | மோட்டார் வாகன வளி சீராக்கி தொழில்நுட்பவியலாளர்<br>AUTOMOBILE AIR CONDITIONING TECHNICIAN | முழு நேரம் ஒரு வருட பாடத்திட்மாக திருத்தப்பட்டுள்ளது |
| 34. | E41S001F4.4 | நீர்க்குழாய் பொருத்துகை சான்றிதழ்<br>PLUMBER<br>முழு நேரம் -<br>1 வருடம் | இரத்தினபுரி தொழில்நுட்பக் கல்லூரி தற்போது NVQ மட்டம் 4 நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது |
| 45. | F45S018F4.1 | பல்திறமை நிர்மாண நிபுணர் (நிர்மாணம்)<br>MULTI SKILLED TECHNICIAN<br>முழு நேரம் - 1 வருடம் | கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி தற்போது NVQ மட்டம் 4 நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது |
| 64. | K72S004P4.2 | தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர்களுக்கான சான்றிதழ்<br>(Information and Communication Technician)<br>பகுதி நேரம் -<br>ஒரு வருடம் | ஆட்சேர்ப்பு தகைமை<br>1. இரு தடவைகளுக்கு மேற்படாது க.பொ.த. (சா.த) பரீட்சையில் போதனா மொழி மற்றும் ஆங்கிலம் மொழி உள்ளிட்ட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>மற்றும்<br>2. உரிய துறையில் தொழிலில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>இறுதிப் பரீட்சைக்கு முன்னர் சம்பந்தப்பட்ட துறையில் 06 மாதம் தொழிலில் பயிற்சியை முடித்திருக்க வேண்டும். |
| 73. | E40S001F3.5 | மின்னியல் தொழில்நுட்பவியலாளர்<br>ELECTRICIAN<br><br>முழு நேரம் -<br>ஆறு மாதங்கள் | பலபிட்டிய தொழில்நுட்ப கல்லூரி தற்போது நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது |
| 96. | D28S002F4.2 | வாயு மற்றும் வளைவுருக்கி ஒட்டுனர் தொடர்பான சான்றிதழ்<br><br>WELDER<br>முழு நேரம் 1 வருடம் | இரத்தினபுரி தொழில்நுட்பக் கல்லூரி தற்போது NVQ மட்டம் 4 நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது |

| தொடர் இல. | பாடநெறிக் குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் | திருத்தஞ் செய்யப்பட வேண்டிய முறை |
|---|---|---|---|
| 106. | F45S004F4.2 | மரக் கைப்பணி தொழில்நுட்பவியலாளர் (கட்டிடம்)<br><br>WOOD CRAFTSMAN (BUILDING)<br>முழு நேரம் -<br>ஒரு வருடம் | இரத்மலானை தொழில்நுட்ப கல்லூரி தற்போது நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது |
| 132 A | D15S001F4.1 | பழங்கள் மற்றும் மரக்கறிகள் உற்பத்தி செய்தலுக்கான சான்றிதழ்<br>(FRUIT AND VEGETABLE PROCESSOR)<br><br>முழு நேரம் -<br>ஆறு மாதங்கள் | இரு தடவைகளுக்கு மேற்படாது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி தற்போது NVQ மட்டம் 4 நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது |
| 135. | N85S022P4.1 | பராமரிப்பாளர் (செவிலியர்) (வயது வந்தோர்)<br><br>Care Giver (Elder) | பகுதி நேரம் ஆறு மாத பாடத்திட்டமாக திருத்தப்பட்டுள்ளது |
| 180. | A01T003F5.1 | விவசாய உற்பத்தித் தொழில்நுட்பவியலில் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா<br>முழு நேரம் பகல்<br>1 ½ வருடங்கள்<br>AGRICULTURAL PRODUCTION TECHNOLOGY | உட் சேர்க்கப்பட்டுள்ள மேலதிக தகுதியாக கருதப்படும்<br><br>க.பொ.த. (உ.த.) பரீட்சையில் விவசாயம் உட்பட மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.<br><br>கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி தற்போது NVQ மட்டம் 5 நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது |
| 182. | A01T003P5.1 | விவசாய உற்பத்தித் தொழில்நுட்பவியலில் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா<br>AGRICULTURAL PRODUCTION TECHNOLOGY<br>பகுதி நேரம் -<br>ஒரு வருடம் | உட்சேர்க்கப்பட்டுள்ள மேலதிக தகுதியாக கருதப்படும்<br><br>க.பொ.த. (உ.த.) பரீட்சையில் விவசாயம் உட்பட மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல். |

| தொடர் இல. | பாடநெறிக் குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் | திருத்தஞ் செய்யப்பட வேண்டிய முறை |
|---|---|---|---|
| 201 | M80T003F5.0 | இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான தேசிய டிப்ளோமா<br><br>TEACHING ENGLISH AS A SECOND LANGUAGE<br><br>முழு நேரம்<br>01 வருடம் | குளியாபிட்டி தொழில்நுட்ப கல்லூரி தற்போது நடை பெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது |

**மற்றைய திருத்தங்கள்**

உணவு தொழில்நுட்ப டிப்ளோமா பாடத்திட்டத்தில் NVQ மட்டம் 5 மற்றும் 6 ஆகியவை 2025 ஆம் கல்வி ஆண்டில் ஒருங்கிணைந்த பாடமாகத் தொடங்கும் மற்றும் தேவைப்பட்டால் அந்த மட்டம் தொடர்பான சான்றிதழை NVQ மட்டம் 5 இன் முடிவில்/இறுதியில் பெற்ற பிறகு பாடத்திட்டத்திலிருந்து விலகலாம்.

12-166

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு***.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2024**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2024 |
| | | வெள்ளி | 13.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2024 |
| | | வெள்ளி | 20.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2024 |
| | | வெள்ளி | 27.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2024 |

**அட்டவணை - 2025**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 03.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.12.2024 |
| | | வெள்ளி | 10.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.12.2024 |
| | | வெள்ளி | 17.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2025 |
| | | வெள்ளி | 24.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.01.2025 |
| | | வெள்ளி | 31.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.01.2025 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 07.02.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.01.2025 |
| | | வெள்ளி | 14.02.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.01.2025 |
| | | வெள்ளி | 21.02.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.02.2025 |
| | | வெள்ளி | 28.02.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.02.2025 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.